# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,206—1962 ජූලි 13 වැනි සිකුරාදා—1962.7.13

13,206 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு யூலை மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 423 | "மதுவரிச்சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச்சபைச் சட்டம்

### முதலாளிகளுக்கு அறிவித்தல்

சம்பளச்சபைகளுக்குட்பட்ட கீழ்க்கண்ட தொழில்களில் தொழிலாளரை வேலைக்கமர்த்தியுள்ள முதலாளிகள் ஒவ்வொருவரும் அவர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ள பத்திரத்திற் கேட்கப்படும் புள்ளி விவரங்களை 1962 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 1 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்கு அனுப்பிவைக்குமாறு தொழில் அதிபர், நெவில் லிங்கன் அபேவீர ஆகிய நான், (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 54 ம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு இத்தாற்கேட்கிறேன்.

2. விவரத்திரட்டை அனுப்பிவைக்கத் தவறும் முதலாளியெவரும் சம்பளச்சபைச்சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய ஒரு குற்றம் புரிந்தவராவார்.

3. இவ்வறிவித்தலின் பிரகாரம் தரவேண்டிய சகல புள்ளிவிவரங்களும், இதுவிடயம் சம்பந்தமாக எழுதும் கடிதங்களும் "தொழில் அதிபர், 'புலி' இல்லம், கொழும்பு 3" என்ற விலாசத்திற்கு அனுப்பப் படவேண்டும். முதலாளி எவராயினும் ஏற்ற பத்திரம் தமக்குக் கிடைக்காவிடின், தமது தொழில் யாதென்பதைத் தெரிவித்து மேற்கூறிய விலாசத்திற்கு உடனே அறிவித்தல் வேண்டும்.

நெ. லி. அபேவீர,
தொழில் அதிபர்.

தொழிற் பகுதி,
கொழும்பு 3,
1962 ம் ஆண்டு ஜுலை மீ 9 ந் தேதி.

#### மேற்கூறிய தொழில்கள்

1. தேயிலை வளர்த்தலும் பதப்படுத்தலும்.
2. கொக்கோ, ஏலம், மிளகு வளர்த்தலும் பதப்படுத்தலும்.
3. ரப்பர் வளர்த்தலும் பதப்படுத்தலும்.
4. தென்னை வளர்த்தல்.
5. தெங்குப்பொருள் உற்பத்தி.
6. இயந்திரத் தொழில்.
7. அச்சடிப்பு.
8. காரீயத்தொழில்.
9. தேயிலை ஏற்றுமதி.
10. ரப்பர் ஏற்றுமதி.
11. கள்ளு, சாராய, வின்னாரித் தொழில்.
12. சுருட்டுத் தொழில்.
13. மோட்டார்ப் போக்குவரத்து.
14. தீப்பெட்டி உற்பத்தி.
15. சினிமாத் தொழில்.
16. கப்பற்றுறை, துறைமுக, படகுத்துறைப் போக்குவரத்து.
17. கட்டடத் தொழில்.
18. பீடி உற்பத்தி.
19. பாண் தயாரிப்பு.
20. செங்கல், ஓடு ஆகியன உற்பத்தி.
21. கறுவாத் தொழில்.
22. மெத்தைத்தும்பு, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழில்.
23. உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழில்.
24. நூல் நூற்றல், நெசவு செய்தல் (மேசுவகை உள்ளுடைகள் உட்பட) உடைகள் தயாரித்தல்.

7-479

### முக்கிய அறிவித்தல்

இத்தாற் சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது யாதெனில், உற்பத்திச் செலவு கூடியதன் காரணமாக இலங்கை அரசாங்க வர்த்தமானியின் விளம்பரக் கட்டணங்களைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் முதலாவது அங்குலக் கட்டணம் ரூபா 10 ம் மேலதிக ஒவ்வொரு அங்குலத்திற்கும் ரூபா 5 ம் என்பதற்குப் பதில் ஒரே கட்டணமாக ஒற்றைப்பந்தி அங்குலத்திற்கோ அன்றி அதன் பகுதிக்கோ ரூபா 10, வியாபாரச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்களுக்கு 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதி தொடக்கம் அறவிடப்படும்.

பேர்னட் டி சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1962 ம் ஆண்டு யூன் மீ 29 ந் உ.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னுல் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஞுப் ஆனி ம௴ 30 ந் உ.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு கப்பற்சேவை,
அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 2.5.62 .. | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | உப உணவுப் பொருட்கள்.. .. | 2.5.1962 ந் திகதியைக்கொண்ட 13,059 ம் இலக்க |
| 7.5.62 .. | ஷை .. .. | மீன்கருவாடும் இளுல்கருவாடும் .. | 7.5.1962 ந் திகதியைக்கொண்ட 13,078 ம் இலக்க |
| 11.5.62 .. | ஷை .. .. | மாசிக்கருவாடு அல்லது போனிட்டோமீன் .. | 11.5.1962 ந் திகதியைக்கொண்ட 13,104 ம் இல்க்க |

7—436

*வெளளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3-30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது